# அந்தப் பெட்டைக் குட்டிகள்

# 5

அது வாலை ஆட்டிக் குரைத்தபடி வீட்டைச் சுற்றி வந்த போதே எனக்குத் தெரியும் இப்படி ஒரு பிரச்சினை வருமென்று. யுத்த நடவடிக்கைகளினால் சனங்கள் இடம் பெயர்ந்து போகேக்க நாயையும் கொண்டு போய் எங்க வைச்சிருக்கிறது. கட்டாக்காலி நாய்களுக்கு குறைவேயில்லை. இப்படி எங்கிருந்தோ வந்து சேர்ந்ததுதான் இந்த நாய். எப்படி கல்லெறிஞ்சு கலைச்சாலும் அது வீட்டைச் சுத்திச் சுத்தி வந்து கடைசியில் வாசலில் கிடக்கத் தொடங்கி விட்டது. எங்கட அயலில எல்லோரும் அதைப் பெட்டை நாய் எனக்கூப்பிட்டு கடைசியில அதன் பெயர் 'பெட்டை நாய்' என்பதாகவே மாறி விட்டது. அந்த மார்கழி மாதம் வரும் வரையில் அது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. வீட்டில் மிஞ்சிப்போன சாப்பாடுகள் எல்லாம் அதுக்குத்தான்... பிறகுதான் சில பிரச்சினைகள் வரத்தொடங்கின. எங்கட நித்திரையும் அடிக்கடி குழம்பத் தொடங்கியது... வீட்டைச் சுற்றி நாய்களின் ஊளையிடலும் குரைப்பும் முறைப்புமாக சில நாட்கள் போயின. வீட்டின் வெளிச்சுவர்களெல்லாம் ஊர்நாய்கள் காலைத் தூக்கும் இடமாக மாறி நாறத்தொடங்கிவிட்டது. தொல்லை தாங்கேலாமல் விறகுக் கட்டையுடன் நான் ஒவ்வொரு இரவும் ரெண்டு மூண்டு தரமென எழும்பி நாய்களைக் கலைத்துப் பெட்டை நாயையும் எங்கட தூக்கத்தையும் காக்க-வேண்டி வந்தது எல்லாம் சரி ஒருமாதிரி அந்தப் பிரச்சினை அடங்கினது பெரிய விடுதலை மாதிரி. நிம்மதியா படுக்கத் தொடங்கி ஆறு மாதம் கழிஞ்சிருக்கும். இப்ப பிரச்சினை புது வடிவில் வந்து விட்டது.

காலையில் நித்திரையால் எழும்பேக்கையே... ஈனக்குரலில் புதிய சில சத்தங்கள் எழத் தொடங்கியதுடன் நான் விளங்கிக் கொண்டேன். பாத்ரூமுக்கு பக்கத்தில் கொஞ்சம் மண்குவிச்சுக் கிடந்தது. அது மதில் கட்டியதுக்குப் பறிச்ச மிச்ச மண். இந்த மணற்குவியலுக்குப் பக்கத்தில் சுவர் மூலையில் இருந்து தான் சத்தங்கள் வந்தன. அருகே போனபோது பெட்டை நாயின் உறுமல் எழுந்தது. பிறகு என்ன நினைத்ததோ, பேசாமல் கிடந்தது. நான் அவதானமாகப் போய் நாய் பாய முடியாத தொலைவில் நின்று கவனித்தேன். ஆ...மொத்தம் ஆறு குட்டிகள் மஞ்சளும் வெளுப்புமாகக் கலந்து, ஒரு குட்டி மட்டும் சாதுவாக நெத்தியில கறுப்பாக பக்கத்துவீட்டு மணியண்ணையின் தடியன் நாயை நினைவுபடுத்தியது. எல்லாம் கண்ணை மூடிக் கொண்டு புரண்டு கொண்டு

கிடந்தன. ஒண்டு ரெண்டு தன் தாயின் மடியைத் தேடி முகர்ந்து அணைத்துக் கொண்டு கிடந்தன.

நாய் குட்டி போட்டு விட்டது என கேட்டவுடனேயே எனது மகள் பறக்கத் தொடங்கி விட்டாள். அன்று மாலையே எனது மகளின் அயல்வீட்டு நண்பர்கள் குழாம் எல்லாம் எங்கட வீட்டு கொல்லையில்தான். கிட்டப்போனால் நாய் கடிக்குமென அவர்களை நாயின் அருகில் அண்டவிடாமல் கலைக்க வேண்டிய மேலதிக வேலையும் எனக்கு ஏற்பட்டு விட்டது.



இப்போதெல்லாம் நாய் தன்பாட்டில் எழுந்து உலாவத் தொடங்கி விட்டது. குட்டிகள் வீடு வாசல் எல்லாம் திரிந்தன. மாலைநேரம் என்றால் அயல் வீட்டுக்கு விளையாடச் செல்லும் எனது மகள் இப்ப முழு நேரமும் வீட்டில்தான். அவளுக்கு நாய்க்குட்டிகளுக்கு அதையிதை கொடுப்பதே வேலை. நாய் குட்டி போட்டு ஒரு கிழமையாகி விட்டது. எங்கட வீட்டில தோட்டவேலை செய்யவென்று வாற மணியம் வந்துதான் குட்டையை குழப்பி விட்டான். “என்ன வாத்தியார் எல்லாம் பெட்டைக் குட்டிகளைப் போல் கிடக்கு...” எனக் கூறிய படி குட்டிகளை ஆராயத் தொடங்கி விட்டான். நானும் அதுக்குப் பிறகுதான் குட்டி கடுவனோ பெட்டையோ என்று விடைதேட முயன்றேன். கடைசியில ஒரேயொரு குட்டிதான் கடுவன் என்பது தெரிந்தது . மிச்சம் ஐந்தும் பெட்டைதான்... அந்தக் கடுவன் குட்டிக்கு எங்கட அயலிலேயே நல்ல டிமான்ட். ஆனாலும் எப்போதாவது பென்சன் அலுவலாவாற கந்தையா மாமாதான் கையோட கடுவன் குட்டியை கிளப்பிக் கொண்டார்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

"ஐந்து பெட்டைக் குட்டிகளையும் நான் என்ன செய்யிறது... உதுகள் வளர்ந்தா இங்கையிருந்து கலைக்கவும் முடியாது கொண்டு போய் எங்காவது விடுங்கோ..." என எனது மனைவி கூறியதை முதலில் பொருட்டாகவே எடுக்க-வில்லை. ஏனெனில் அவை அவ்வளவு அழகாக குண்டு குண்டாக ஓடித்திரிந்தன. எனது மகளும் அதுகளுக்குப் பின்னாலேயே ஓடியாடித் திரிந்தாள். குட்டிகள் பழையதுணி, சாக்கு என அகப்பட்டவற்றைக் கடித்து இழுபட்டு விளையாடின.

ஆனாலும் மணியம்தான் திரும்பவும் குட்டையைக் குழப்பி விட்டான். தங்கட அயல் வீட்டில் ஆருக்கோ விசர்நாய் கடித்து நாய் மாதிரி குலைத்து மிக அவலமாகச் செத்துப்போன கதைதான் அது. இந்தக்கதையை எங்கட வீடு பக்கத்து வீடு என எல்லாருக்கும் சொல்லி குட்டி நாய்களுக்குத்தான் இப்ப விசர் கூடுதலாக வருவதாக ஊரில் கதைப்பதாகவும் கவனமாக இருக்க வேணுமென மிக நீளமான விரிவுரையாற்றி விட்டுச் சென்று விட்டான். இதுக்குப் பிறகு பக்கத்து வீட்டார் எங்கட குட்டிகளைப் பார்க்கும் போதெல்லாம் ஏதோ விசர் நாய்க் கூட்டத்தையே பார்ப்பது போல் பார்த்தனர். அது மட்டுமில்லாமல் சாடைமாடையாக எனக்குக் கூறத் தொடங்கி விட்டனர். "மாஸ்டர் குட்டிகள் முழுக்கப் பெட்டைக்குட்டிகள். உதுகளின்ர தாய் நாயும் ஊரெல்லாம் ஓடித்திரியுது... உதுகளை வச்சு என்ன செய்யப்போறியள்.... வளரமுந்திக் கொண்டு போய் எங்காலும் விடுங்கோ..." என எதிர் வீட்டு தம்பிராசா அண்ணன் அவசரமாக ஒருநாள் கூறினார். எனது வீட்டிலும் இதையே காலையில எழுந்ததும் எனக்குக் கூறத் தொடங்கி விட்டனர். நானும் பார்ப்போம் என ஒருமாதிரி மூன்று கிழமை போய்விட்டது.

இந்த நாய்க் குட்டி விடயத்தால் எனக்கும் எனது மனைவிக்கும் கூட அடிக்கடி தகராறு ஏற்படத் தொடங்கிவிட்டது. ஆனாலும் மகள் எனது பக்கம்தான் நிற்பாள். குட்டிகள் பாவம் என்பாள். ஆனாலும் நான் நினைத்து விட்டேன் குட்டிகளை அப்புறப்படுத்துவதென்று. ஆனா இப்போதுதான் பிரச்சினையே ஆரம்பமாகிறது. எங்க கொண்டு போய் விடுவது...? விட்டால் அதுகள் சாப்பாட்டிற்கு என்ன செய்யும்...? என்பது போன்ற கேள்விகள் எழுந்தன. உண்மையிலேயே நாய்ப் பிறவி கொடுமையானது. அதிலும் பெட்டை நாய் என்றால் சொல்ல வேண்டாம் என்பது எனது வீட்டைப்பார்க்க விளங்கியது.

அன்று காலை 'நாய்க்குட்டிகளை இன்று எங்காவது கொண்டு போய் விட்டேயாக வேண்டும்' என என் மனைவி முடிவாகச் சொல்லி விட்டாள். பாவம் குட்டிகள் சில வேளைகளில் வீட்டினுள்ளும் நுழைந்து தமது காலைக்கடன்களை சத்தமில்லாமல் முடித்து விடும். அப்படித்தான் அன்று காலையும். நான் மாலையில் குட்டிகளைஅப்புறப்படுத்துவதென தீர்மானித்தபடி வேலைக்குச் சென்று விட்டேன். மாலையில் வேலையால் வீடு திரும்பியபோது குட்டிகள் பற்றி மனைவி நினைவூட்டி-னாள். ஒரு யூரியா உரப்பையையும் எடுத்து வைத்திருந்தாள்.

“இப்ப எங்க கொண்டு போய் விடுவது... செம்மணிப் பக்கம் எண்டால் தூரவாப் போச்சு.. இனி சுடலப் பக்கம்...” என மனைவியிடம் கூறினேன். கனதூரம் வேண்டாம் உதில கோண்டாவில் பக்கம் கொண்டு போய் தோட்டப் பக்கம் விட்டிட்டு வாங்கோ, அதுகள் எங்காலும் போகட்டும்...” என மனைவி கூறினாள். எனக்கும் அதுவே சரியென்று பட்டது. எதுக்கும் கொஞ்சம் இருட்டட்டும் எனக் காத்திருந்தேன். எனது மகள் நின்றால் குட்டிகளைக் கொண்டு போக விடமாட்டாள் என்பதனால் முன்னமேயே பக்கத்து வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விட்டாள்.



எனது மனைவி இலகுவாகக் குட்டிகளைப் பிடிக்கக்கூடியதாக பழைய அடிவிட்டுப் போன பரல் தகரம் ஒன்றிற்குள் குட்டிகளை விட்டிருந்தாள். ஒரு ஏழு மணி அளவில் நான் மெல்ல சைக்கிளை இறக்கி ஆயத்தமாக வைத்துக் கொண்டு உரப்பையை எடுத்தபடி குட்டிகளை நோக்கிப் போனேன். தகரத்துக்குள்ளே கையை விட்டவுடன் குட்டிகள் நான் முந்தி நீ முந்தியென துள்ளி விழுந்து வெளியில் வரத்துடித்தன. ஒவ்வொன்றாகப் பிடித்து சடசடவென உரப்பையில் போடத் தொடங்கினேன்.

...ஆ... ஒரு மாதிரி நான்கு குட்டிகளைப் போட்டாயிற்று. ஐந்தாவது... ஏனைய குட்டிகளை விடச் சிறியது. ஆனால் அதுதான் பிரச்சினையைக் கொடுத்து விட்டது. அது சட்டென பிடியில் இருந்து நழுவி தகரத்துக்கு வெளியில் விழுந்து ஓடத் தொடங்கியது. நான் உரப்பையை ஒரு கையில் கொத்தாகப்

பிடித்தபடி அந்தக் குட்டியைப் பிடிக்க ஓடினேன். உரப்பையில் இருந்த குட்டிகள் புரண்டு கத்தத் தொடங்கி விட்டன. கடைசிக் குட்டி பின் புற விறாந்தையில் படிக்கட்டின் கீழ் போய் நின்று குலைத்தது. நான் மெல்ல அடி மேல் அடி வைத்து விறாந்தைக்கு போய் படிக்கு அருகில் நின்ற குட்டியை நோக்கிப் பாய்ந்தேன்...

படி சறுக்கிவிட்டது. ஆ.... படியின் மூலை காலைப்பதம் பார்த்து விட்டது. வலது பக்கக்கால் பெருவிரல் நகம் பெயர்ந்து இரத்தம் வரலாயிற்று. குட்டி மறுமுனையில் நின்று தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தது. எனக்கு இயலாமையும் கோபமும் ஏற்பட்டு பற்கள் நறநறத்தன. இன்று இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டேன். உரப்பையின் வாயைக் கட்டி மரக்கட்டில் மேல் போட்டு விட்டேன். உள்ளே குட்டிகள் வெளியில் வர துடித்து பிறாண்டிக் கொண்டிருந்தன.

மெல்ல விறாந்தையில் நின்ற குட்டியை நோக்கிச் சென்றேன். அது என்னைக் கண்டவுடன் ஓடத் தொடங்கியது. நானும் விடவில்லை... வீட்டைச் சுற்றியுள்ள எல்லா விளக்குகளையும் போட்டேன். நாலாவது முறை வீட்டைச் சுற்றி ஓடும் போதுதான் அந்த குட்டி எனது கையில் அகப்பட்டது. கழுத்துப் பிடியில் கொண்டு வந்து உரப்பையில் போட்டுக் கொண்டு சைக்கிளை எடுத்தபோது மணி எட்டைத் தாண்டி விட்டது.

உரப்பையை முன் கான்டிலில் வைத்துக் கொண்டு கோண்டாவில் பக்கமாக மிதித்தேன். இந்தக் குட்டிகளுடன் உலைந்ததில் எனது இரக்கத்தன்மை எங்கோ மறைந்து விட்டிருந்தது. உரப்பையை பிறாண்டிக் கொண்டு ஒரு குட்டியின் மூக்கு வெளியில் தெரிந்தது. ஒரு பத்து நிமிட நேர சைக்கிள் ஓட்டத்தின் பின் அந்த தோட்டவெளி வந்தது. மறு புறத்தில் விட்டால்தான் இதுகள் இருக்கிற வீடுகள் பக்கம் போய் ஏதாவது சாப்பாட்டைப் பார்த்துக் கொள்ளும். இல்லாட்டி திரும்ப எங்கட பக்கமே வந்திடும் என்று நான் எண்ணிக் கொண்டு சந்திப்பக்கமாக உசிதமான ஒரு இடத்தைத் தேர்ந்தேன்.

வெளியில் கும்மிருட்டாக இருந்தது. மெல்ல சைக்கிளை நிறுத்தி ஆளரவமற்ற வீதியின் கரையில் உட்பக்கமாக மதிலுக்கு அருகில் உரப்பையை கவிட்டுக் கொட்டினேன். ஐந்து குட்டிகளும் பொதக் பொதக் கென விழுந்தவுடன் மெல்லிய அனுங்கல் சத்தம் மட்டுமே கேட்டது. தூரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று வெளிச்சமாக வந்து கொண்டிருந்தது. திரும்பிப் பார்க்காமல் நான் உரப்பையை கரியரில் வைத்து விட்டு சட்டென்று சைக்கிளைத் திருப்பியவாறு புறப்பட்டு விட்டேன்.

அப்பாடா.... ஒரு மாதிரி பெரிய ஒரு பிரச்சினை தீர்ந்தது. என்ற நிம்மதி மனதில் எழுந்தது. ஆனாலும் அந்தக் குட்டிகள் பாவம்.... அதுகள் எங்க போகும்... என்னத்தை தின்னும் ... மனதில் என்னவோ உறுத்திக் கொண்டிருந்தது. சீ என்ன

வாழ்க்கை என்பது போன்ற உணர்வு எழுந்தது. மனதில் எழுந்த சோர்வு உடலிலும் மாற்றத்தை ஏற்படுத்த சைக்கிள் மிக மெதுவாகவே வீட்டுக்கு வந்து சேர்ந்தது. எனது மனநிலையைப் புரிந்து கொண்ட எனது மனைவி “எத்தனையோ பிரச்சினையிருக்க இதைப் போய் யோசிச்சு மண்டையகுளப்பிறியள்” என்றாள்.

எனது மகளுக்கும் குட்டிகள் போனது வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவள் நிலைமையை புரிந்து விட்டிருந்தாள். பிறகு நான்அதை மறந்து விட்டேன். மறுநாள் பொழுதும் பள்ளிக் கூடத்தில் ஏதோ விழாவுடன் பிசியாக முடிந்து விட்டது. மூன்றாம் நாள் மாலையில்தான் கோண்டாவில் பக்கம் போக வேண்டிய தேவை எழுந்த போதே குட்டிகளைப் பற்றிய எண்ணம் ஏற்பட்டது.

நான் மாலை வேளைகளில் சற்று ஓய்வாக இருக்கும் நேரத்தில் கோண்டாவில் பக்கம் சென்று எனது நண்பர் கருணாவுடன்அப்பொழுதைக் கழிப்பது வழக்கம். இது கொஞ்ச நாட்களாகத் தடைப்பட்டுக் கிடந்தது. இன்று எப்படியும் ஒரு முறை போக வேண்டும் என நினைத்தேன். கருணாவுடன் எனக்கு ஏற்பட்ட நெருக்கம் அவன் ஒரு இலக்கிய ஆர்வலர் என்பதற்கு மேலாக நான் கூறுபவைகளை செவிமடுத்து கேட்கக் கூடிவனாகவும் இருந்தமையே ஆகும். இருவரும் சுவாரசியமாக பல விடயங்களைப்பற்றி சினிமா, இலக்கியம், ஓவியம், புத்தகம் என நெடுகக் கதைப்போம். சைக்கிள் கோண்டாவில் சந்தியை அண்மித்துக் கொண்டிருந்த நேரத்திலேயே அந்த பெட்டைக் குட்டிகளின் நினைப்பு எழுந்தது. இன்று மூன்றாவது நாள். அவை எங்காவது ஓடி புகலிடம் தேடி இருக்கும்..... அல்லது... இறந்து விட்டிருக்குமோ...

அந்த நினைப்பே என் மனதைக் கசக்கியது. இல்லை சந்திக்கு அருகில் தேத்தண்ணிக்கடைகள் சாப்பாட்டுக் கடைகள் எல்லாம் இருக்கின்றன. அங்கவாற மிச்சங்களை சாப்பிட்டு திரியும், என வேண்டாத நினைப்பை மாற்ற முயன்றேன்.

சைக்கிள் தோட்ட வெளியைத் தாண்டிக் கொண்டிருக்கிறது.எனது மனச்சஞ்சலத்தை வெளிக்காட்டாது ஒரு சினிமாப் பாடலை விசில் செய்து கொண்டு சென்றேன். எனது பார்வைகள் என்னையறியாமல் வீதியின் இருமருங்கும் தேடின. குட்டிகள் வீதியில் திரிவது போல எனது மனக்கண்களுக்குள் காட்சியும் விரிந்தது. வலுக்கட்டாயமாக நினைப்பை மாத்தினேன். தோட்ட வெளியைக் கடந்து அந்த மதில் வைத்த வீடுகள் புலப்படலாயின. சந்தியும் அண்மித்துக் கொண்டிருந்தது. அந்த லைற் போஸ்டிற்கு அருகில் இருக்கும் வீட்டின் மதிலுடன்தானே விட்டதாக ஒரு ஞாபகம்... எனது கண்கள் மேலோட்டமாக அந்த மதில் பக்கத்தை நோட்டமிட்டவாறு “...ஆ... அங்கே... அங்கே... அந்த ஐந்து குட்டிகளும் அந்த இடத்திலேயே ஒன்றாக, ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாக, ஒன்றுக்குள் ஒன்று என்ற நிலையில் இணைந்து திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தன. அவற்றின் உடல்கள் பசிக்களையால் நடுங்கிக் கொண்டிருந்தன. வீதியில் போகும் வரும் வாகனங்களின் இரைச்சலால் அவை பயந்து போய்க் கிடந்தன .

நான் மெல்லச் சைக்கிளை ஓட்டியவாறு அவ்விடத்தைக் கடந்து சென்றேன். ஆனால் என் மனமும் வேகமும் அவ்விடத்துடன் நின்று விட்டன.



உண்மையில் நான் தளர்வடைந்து விட்டேன். நிச்சயம் நான் இதை எதிர்பார்க்கவில்லை. மூன்று நாட்களாக நான் போட்ட இடத்திலேயே அந்தக் குட்டிகள் உணவு எதுவும் இன்றி... "இதென்னடா..." என் மனம் சோர்வடைந்து விட்டது... எனக்குத் தெரியும் நான் இப்படித்தான் என்பது ... எனது மனைவி கூட என்னைக் குற்றம் சொல்வது 'நீங்கள் தேவையில்லாத விசயத்துக்கெல்லாம் சும்மா கவலைப்பட்டுக் கொண்டு இருப்பியள்' என்று. நானும் என்னை சற்று மாற்றிக் கொள்ள முயற்சி எடுத்து பார்ப்பதுண்டு. ஆனால் எல்லாம் கொஞ்ச நேரத்துக்குத்தான். இப்படித்தான் ஒரு முறை எங்கட வளவில் தேங்காய்களை களவெடுத்ததாக ஒருவனைப் பிடித்தனர். நான் அவனைக் கடுமையாகப் பேசி ஒருமுடிவு எடுப்பதெனக் கூறிக் கொண்டே அவன் இருந்த இடம் நோக்கிப் போனேன். பிறகு அவனது கதைகள்... உழைப்பு... ஏதுமில்லாத்தன்மை, இவற்றையெல்லாம் அவன் எனக்குக் கூறிய போது எனது நிலை தளர்ந்து மேலும் சில தேங்காய்களை அவனிடம் கொடுத்து அனுப்பியதே நடந்தது.

கருணாவை நான் சந்தித்தபோது கருணா கேட்ட முதல் கேள்வி "என்ன மாஸ்டர்.... ஏதும் பிரச்சினையே" எனக்கு எல்லாவற்றையும் கருணாவிடம் சட்டென ஒப்புவிக்க வேண்டும் போல் இருந்தாலும் ..... உடனடியாக சொல்ல விரும்பவில்லை. "சீ... அப்படி ஒன்றுமில்லை... லேசா தலையிடி." என ஒப்புக்கு கூறி வைத்தேன்.

கொஞ்சநேரம் பலவிதக் கதைகளையும் கதைத்து விட்டு எனது பிரச்சினையை நண்பர் ஒருவரின் பிரச்சினையாக கதை போல கருணாவிடம் கூறினேன். குட்டிகளை மீண்டும் அதே இடத்தில் காணுவதையும் கூறி இதன் முடிவு என்னவாக இருக்கும் எனக் கேட்டபோதுதான் கருணா மெல்லக் கேட்டான் நீங்கள்தானே அந்த நண்பர் என்று... மெல்ல புன்னகைத்தபடி தலையை ஆட்டினேன். கதைக்கு முடிவு சொல்ல கருணா முன்வர வில்லை. “நண்பரே... வாழுறதுக்கான உரிமை எல்லா உயிர்களுக்கும் இருக்கு; ஆனால் இந்த நாய்க்குட்டிகளின்ர நிலையிலைதான் இப்ப ஆயிரக்கணக்கான பிள்ளையள் பெற்றோரை இழந்து அகதி முகாம்களில் ஆதரவுக்கு ஏங்கிக் கொண்டிருக்குதுகள். அதுகளுக்கே தங்கட தாய் தகப்பனோட வாழுற உரிமை தங்கட வீடுகளில் பாதுகாப்பா சுதந்திரமா வாழுற உரிமை மறுக்கப்பட்டிருக்கு...” நான் முடிவுகள் எதுவும் அற்ற நிலையில் குழம்பிய மனதுடனேயே அங்கிருந்து புறப்பட்டேன். சந்தியில் இருந்த கடைகள் கைவிளக்குகளால் வெளிச்சப்படுத்தப்பட்டிருந்தன. நேரம் எப்படியும் ஏழரை மணியாகி இருக்கும். குட்டிகளின் நினைப்பு மீண்டும் எழுந்தது. அவற்றை கடந்துதான் நான் மீண்டும் செல்ல வேண்டும். அந்தக் கடையில் கண்ணாடி அலுமாரியில் ஒன்றிரண்டு பாண் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சேட் பொக்கற்றைத் தடவி ஒரு பத்து ரூபாவை எடுத்தேன்.

இப்போதைக்கு இதுதான் வழி... கடையில் ஒரு றாத்தல் பாண் வாங்கிக் கொண்டேன். அதனை மூன்று துண்டுகளாகப் பிரித்துப் பையில் போட்டுக் கொண்டு சைக்கிளை மிதித்தேன். சந்தியைக் கடந்து தோட்டப்பாதையில் இறங்கி விட்டேன். பாண் பையை வசதியாக மற்றக்கையில் மாற்றிக் கொண்டேன். இறங்கி நின்று குட்டிகளுக்கு உணவைக் கொடுப்பதால் அயல் வீட்டுக்காரன் கண்டு நான்தான் குட்டிகளை கொண்டு வந்து விட்டுவிட்டேன் என தெரிந்து என்னிடம் ஆத்திரம் கொள்ளக் கூடும். எனவே குட்டிகள் இருக்கும் இடத்தைக் கடக்கும் போது பாண் இருக்கும் பையை எறிந்து விட்டால் சரி... அவை பிறகு என்னபாடாவது படட்டும். இதுதான் எனது இறுதி முடிவு.

அந்த இடத்தை சைக்கிள் மெல்ல நெருங்கியிருந்தது... எங்கும் கும்மிருட்டு பாதை மட்டும்தான் ஓரளவு புலப்பட்டது. இருளுக்குள் குட்டிகள் தெரியவில்லை நான் அந்தத் திசையில் பையை மெல்ல எறிய ஆயத்தமானேன். ஒரு வாகனம் வெளிச்சத்தைப் பரப்பியவாறு வந்து கொண்டிருந்தது. வாகனத்தில் இருப்பவர்கள் கவனிக்காமல் எறிய வேண்டும் ... ஆ... அந்த... மதில் இதோ பையை எறிந்து விட்டேன். பை போய் விழும் சத்தம் கேட்டது... ஆனால் இப்போது அந்த வாகன வெளிச்சம் மதில் பகுதியை நன்றாகப் புலப்பட வைத்து விட்டது.

அங்கு நான் எறிந்த பை மட்டுமே இருந்தது. அதில் இருந்த பாண் துண்டுகள் வெளியே வந்து விழுந்து கிடந்தன... ஆனால் குட்டிகளைக் காணவில்லை!

**முத்து இராதாகிருஷ்ணன்**

நன்றி: புது வசந்தம் 1999

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| கட்டாக்காலி | - | தன்னிச்சைப்படி அலையும் (மிருகம்) |
| ஈனக்குரல் | - | சக்தியின்றி மெலிதாக ஒலிப்பது (பலகீனமான குரல்) |
| மதில் | - | சுற்றுச்சுவர் |
| கடுவன் | - | ஆண்நாய் |
| குட்டை | - | குறைந்த அளவு நீர் தேங்கி நிற்கும் இடம் |
| விறாந்தை | - | தாழ்வாரம் (வராந்தா) |
| உசிதமான | - | பொருத்தமான |

## கிரகித்தல் பயிற்சி

1. *பெட்டை நாய் எத்தனை குட்டிகளை ஈன்றது?*
2. *கடுவன் குட்டியை எடுத்துக்கொண்டவர் யார்?*
3. *பெட்டைக் குட்டிகள் எவ்வாறு வீட்டிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டன?*
4. *பெட்டைக் குட்டிகளின் வாழ்க்கை மனித வாழ்க்கையோடு எவ்வாறு தொடர்புடையது?*
5. *பெட்டைக் குட்டிகளை மதிலுக்கருகில் விட்டுச் சென்ற ஆசிரியரின் குணப்பண்புகளை ஆராய்ந்து எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : இப்பாடத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று வினாக்களை உமது சகாவிடம் கேட்டு விடைகளைப் பெறுக. அதை ஆசிரியரிடம் கலந்துரையாடுக.

செயற்பாடு 2 : இந்த கதையில் கூறப்பட்டுள்ளது போன்று வீட்டிலுள்ள செல்லப்பிராணிகளின் செயற்பாடுகள் பற்றி உமது குழுவில் உள்ளவர்கள் பெற்றுள்ள அனுபவத்தை கலந்துரையாடுக.

செயற்பாடு 3 : செல்லப்பிராணிகளால் மனிதன் நன்மையடைகின்றான் - நன்மையடையவில்லை என்ற தலைப்பின் கீழ் ஏனைய குழுவினருடன் விவாதம் செய்க.

செயற்பாடு 4 : இதன் மூலம் நீர் பெற்ற படிப்பினைகளை எழுதுக.

## மொழிவளம்

**01. அடைப்புக்குறிக்குள்ளிருக்கும் மரபுப் பெயர்களைப் பயன்படுத்தி, பின்வரும் வாக்கியங்களை முழுமைப்படுத்துவோம்.**

(கதறியது, கர்ச்சித்தது, குஞ்சுகளை, குட்டிகளை)

1. தம்பி மீன்..............................ப்பார்த்து இரசித்தான்
2. கன்றைக் காணாத பசு......................................
3. பாம்பு தன்.................................... உண்டது.
4. சிங்கம் கூட்டிலிருந்தவாறே...............................

**02. பின்வருவனவற்றின் இலைக்குரிய மரபுப் பெயர்களை எழுதுவோம்.**

1. பனை : ..........................
2. நெல் : ..........................
3. வாழை : ..........................
4. தென்னை : ..........................

**03. பின்வரும் மரபுச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைப்போம்**

1. வடலி : ..........................................................................
2. சிப்பம் : ..........................................................................
3. நுங்கு : ..........................................................................
4. மூசு : ..........................................................................

## இலக்கணம்

**▶மாற்றொலிகள்**

**பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்**

க - கனவு, கடிதம், கரை
ச - சட்டி, சனி, இசை
ட - பட்டம், வட்டி, மட்டம்
த - தனி, தங்கம், தாமரை
ப - படி, பனி, பாலை

இச்சொற்களில் இடம்பெறும் க , ச , ட , த , ப ஆகிய எழுத்துக்கள் இயல்பாக உச்சரிக்கப்படுவதனைக் காணலாம்.
பின்வரும் உதாரணங்களை கவனியுங்கள் க , ச , ட , த , ப ஆகியன வேறு வகையில் ஒலிப்பதனை காணலாம்.

க - தங்கம், தங்கை, அகம், வாகை
ச - மஞ்சள், நெஞ்சம்
ட - கடம், வடை
த - பாதம், சதை
ப - சம்பல், தும்பி, சபலம், சபித்தார்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இவ்வாறு ஓர் எழுத்து வேறுவகையில் ஒலிப்பதனை மாற்றொலிகள் என்பர்.
மாற்றொலிகளுக்கு ஒலி வேறுபாடு உண்டு.
மாற்றொலிகள் கருத்து மாற்றத்தை ஏற்படுத்தாது.

| ஒலியன் | மாற்றொலிகள் |
|---|---|
| கனவு | இங்கு , மகன் |
| சட்டி | நெருஞ்சி , பிச்சை |
| பட்டம் | வடம் |
| தண்ணீர் | மாதம் |
| பசு | நம்பு , அபாயம் |

## பயிற்சி

**பின்வரும் தொகுதியில் இடம் பெறும் மாற்றொலிகளின் கீழ்க் கோடிடுக.**

1. கத்தினான், காகம், கிளி
2. படி, பழம், கம்பன்
3. நாடகம், படி, வட்டம்
4. தளிர், இதம், சம்மதம்
5. சாலை, நெஞ்சம், மிச்சம்